# மன்னா

CSI தமிழ் திருச்சபை
அலைன்

## Harvest and Thanksgiving Festival



நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன் நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன் இரட்சிப்பு கர்த்தருடையது என்றான்.

யோனா2:9

பொழிவு.11 அக்டோபர் 2018 ஆகாரம் 09

# பொருளடக்கம் Contents

ஆயர் மடல்… 2

திருமறை தியானப்பகுதி… 3

செயலரிடமிருந்து… 5

பெண்கள் ஐக்கிய சங்கம் 6

மிஷனரி பணித்தளச்செய்திகள் 7

திட்டங்கள் / PROJECTS 8

கட்டுரைகள் /ARTICLES 9

சிறுவர் பகுதி / CHILDREN'S PLACE 12

Children's Quiz 15

Kids Coloring 18

Bible Crosswords 19

வேத வினா விடை போட்டி 21

பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர் 23

தினசரி வேதவாசிப்பு 25

திருசபை ஆராதனை நேரம் 26

ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள் - ஜாஹலி 26

# ஆயர் மடல்...

*அன்புக்குரியவர்களே,*

***Happy Harvest Festival…!***

*2018'ம் ஆண்டின் வருடாந்திர அறுவடை ஸ்தோத்திர பண்டிகை வாழ்த்துக்கள்!*

*வருடத்திற்கு ஒரு முறை திருச்சபையின் ஒவ்வொரு விசுவாசியும் நேரடியாக ஊழிய களத்தில் இறங்கி தன்னை கிருபையினால் இரட்சித்த அருள்நாதர் இயேசுவுக்காக ஊழியம் செய்ய வாய்ப்பு கிடைக்கும் தருணம் இந்த அறுவடை ஸ்தோத்திர பண்டிகை. ஆதலால் இந்த பொன்னான வாய்ப்பை நழுவ விடாமல், ஏதோ ஒரு வகையில் உங்கள் பங்குக்கு ஊழியம் செய்ய மனமகிழ்ச்சியுடன் முன் வந்தால் கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வரையும் ஆசீர்வதிப்பார்.*

*வருகிற ஸ்தோத்திர பண்டிகையில் நான் எவ்வாறு ஊழியம் செய்ய முடியும் .*

*1.அனுதின ஜெபம்.*

*2.பிற நண்பர்களை அழைத்து வர இப்பொழுதிருந்தே நண்பர்களை ஆயத்தப்படுத்துவது.*

*3. ஏலத்திற்கு முதற் பலன்களை கொண்டு வர ஆயத்தப்படுவது.*

*4. குடும்பமாக அமர்ந்து ஏலத்தில் இந்த ஆண்டு எவ்வளவு எடுத்து ஊழியம் செய்ய முடியும் என்று தெளிவாக திட்டமிட்டு செயல் படுவது.*

*5. Raffle tickets'ஐ பிற நண்பர்களுக்கு கொடுத்து, அவர்களையும் ஊழியத்தில் பங்குபெறவைப்பது.*

*6. உடல் உழைப்பை கொடுப்பது.*

*இவ்வாறு இந்த 6 காரியங்களை செய்வதோடு குடும்பமாக ஸ்தோத்திர பண்டிகை ஆராதனையிலும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.*

*கர்த்தரை இவ்வாறு கனப்படுத்துங்கள்..! கர்த்தர் நல்லவர்! கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வரையும் கனப்படுத்துவார்.*

*கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வரையும் ஆசீர்வதிப்பாராக.*

*இப்படிக்கு,*
***உங்கள் ஆயர்,***
***Rev. M. Christopher Rajendran.***

# திருமறை தியானப்பகுதி...

## Meditation

அன்புக்குரியவர்களே,

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று வேதம் சொல்கிறது ( 2 கொரிந்தியர் 9:7).

தேவன் நமக்கு கொடுத்த வண்ணமாகவே இருக்கிறார்! அவர் நமக்கு தேவையான, முக்கியமான ஒன்றை திடீரென நிறுத்தி விட்டாரென்றால்! நம்மால் இந்த உலகத்தில் ஒரு நிமிடம் கூட உயிர் வாழ முடியாது! இதை உணர்ந்து விட்டால் அவரது பிள்ளைகளாகிய நாம் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவைப்போல தியாகத்தோடும்,உற்சாகத்தோம் கொடுக்க முன் வருவோம்.

முதலாவதாக நாம் கொடுப்பதின் அடிப்படைக் காரணம் இயேசுவின் மீது கொண்ட அளவற்ற அன்பு. இயேவை வார்த்தையினாலும்,நாவினாலுமல்ல,விசுவாசக்கிரியையினாலும்,உ ண்மையினாலும்,அவருடைய ஊழியத்திற்கு உள்ளன்போடு திராணிக்குதக்கதாய் கொடுப்பதினாலும் நமதன்பை வெளிப்படுத்த வேண்டும். மாயமற்ற அன்பு இயேசு மீது நமக்கிருந்தால், கொடுப்பது ஒன்றும் நமக்கு கடினமாக இருக்காது. இயேசுவுக்காக கொடுப்பதில் நாம் ஏன் இன்னமும் தடுமாறுகினோமென்றால்? கிறிஸ்துவினுடைய அன்பின் அகலத்தையும், நீளத்தையும், ஆழத்தையும், உயரத்தையும் கல்வாரிச்சிலுவையிலே அவர் நமக்காக சிந்திய இரத்தத்தையும் இன்னதென்று உணர்ந்து அறியாததினாலாகும்.அந்த தெய்வீக அகாப்பே அன்பினால் இன்னமும் நாம் நிரப்பப்படாமல் இருப்பதினாலாகும்.ரோமர் 5:5ன்படி பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயத்திலே ஊற்றப்பட்டிருந்தாலும், சுயம் இன்னமும் சிலுவையில் அறையப்படாததினால்,நாம் இயேசு கிறிஸ்துவை உண்மையாக அன்பகூருவதிலே தடுமாருகிறோம்.

இரண்டாவதாக நாம் கொடுப்பதின் அடிப்படைக் காரணம் இயேசுவின் மீது கொண்ட அளவற்ற நம்பிக்கை!

கர்த்தர் நல்லவர்,வல்லவர்,என் மேய்ப்பர் ஆதலால் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக,மிகவும் பாதுகாப்பாக இருக்கிறேன், இருப்பேன், என் அடிப்படைத்தேவைகளை அவர் சந்திக்க வல்லவராக இருக்கிறார்! நான் தாழ்ச்சியடைவதில்லை என்று கர்த்தர் பேரில் ஒரு ஆழமான நம்பிக்கை வைப்பதுதான் உண்மையான

*நம்பிக்கை. அவர் என்னை விட்டு விலகமாட்டார், என்னைக்கைவிடவும்மாட்டார் எந்த ஒரு சூழ்நிலையிலும் என்று நம்புவதுதான் அளவற்ற நம்பிக்கை. கர்த்தரில் இப்படிப்பட்ட நம்பிக்கையை வைத்திருந்தால்! நாளையைக்குறித்து பாதுகாப்பற்ற உணர்வோடு அளவுக்கதிகமாக முட்டாள் ஐஸ்வர்யவானைப்போல தன் ஆத்துமாவுக்காக களஞ்சியத்தை இடித்து பெரிதாகக் கட்டி தானியத்தை பதுக்கி வைத்திருக்கமாட்டாராகள். பரலோகத்திலே பொக்கிஷத்தை சேர்த்துவைக்க இயேசுவின் ஊழியத்திற்கு தாராளமாக கொடுப்பார்கள் அளவற்ற நம்பிக்கையோடு!*

*கர்த்தருடைய வார்த்தைகளை உண்மை என்று நம்பினால் நாம் கர்த்தருடைய ஊழியத்திற்கு தாராளமாக கொடுக்க முன்வருவோம். கர்த்தரை இவ்விதமாய் நம்புகிறவனோ செழிப்பான்.*

*மூன்றாவதாக நாம் கொடுப்பதின் அடிப்படைக் காரணம் இயேசுவின் மீது கொண்ட அளவற்ற விசுவாசம். கர்த்தருக்கு நாம் எதைச்செய்தாலும் விசுவாசத்தோடு செய்யும்போது பிரியமாயிருக்கிறேன் என்கிறார். விசுவாசத்தினாலே ஆபேல் செலுத்திய காணிக்கையை கர்த்தர் அங்கீகரித்தார். விசுவாசத்தினாலே ஆபிரகாம் தன் ஒரே மகனை பலி செலுத்தியபொழுது கர்த்தர் அவனோடும் அவன் சந்ததிகளோடும் உடன்படிக்கை ஏற்படுத்தி அவர்களை ஆசீர்வதித்தார்.*

*கிருபையினால் விசுவாசத்தை க்கொண்டு இலவசமாக இரட்சிப்பைப்பெற்ற நாம், அந்த கிருபையின் ஆழத்தை உணர்ந்து விசுவாசத்தோடும், ஆழமான நம்பிக்கையோடும், உள்ளன்போடும் முதற் பலன்களை கொண்டு வந்து படைத்து கர்த்தரை கனப்படுத்துங்கள், பிரியப்படுத்துங்கள்,மகிமைப்படுத்துங்கள். கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வரையும் கனப்படுத்துவார். கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வரையும் ஆசீர்வதிப்பாராக!*

*அன்புடன்.*
***உங்கள் ஆயர்,***
***Rev. M .Christopher Rajendran.***

# Wonderful wishes to everyone in honor of the upcoming Harvest Celebration!

# செயலரிடமிருந்து…

*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே…*

*இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.*

*ஜெபத்தினாலும் தியாக–உற்சாக காணிக்கைகளினாலும் இவ்வுழியத்தை தாங்கி வருகிற உங்களுக்கு கர்த்தர் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவார்.*

*இந்த மாதம் 26ஆம் தேதி நடைபெறவிருக்கும் நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்காக அனுதினமும் ஜெபியுங்கள். உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்துக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம். திருச்சபை மக்கள் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.*

*தேவ கிருபை உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக..*

*இப்படிக்கு*
*கிறிஸ்துவின் பணியில் உங்கள் சகோதரன்*
***S. சுரேஷ் ராஜன்***

**குறிப்பு**:
*ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் Church Email அல்லது WhatsApp மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.*

*Your name / Quiz type / Month-Year*
***Sample: Dennis / Childrens Quiz / Oct-18***
***Jayme / Kids Colouring / Oct-18***
***Christopher / Bible Quiz / Oct-18***

***Church Email: csitcalain@gmail.com***
***WhatsApp no: +971 505 868 173 (Suresh Rajan)***

# பெண்கள் ஐக்கிய சங்கம்


*அன்புக்குரிய தாய்மார்களே!*

*ஸ்தோத்திர பண்டிகை வாழ்த்துக்கள்.*

*கர்த்தர் நமக்கு பெரிய பெரிய காரியங்களை செய்திருக்கிறார். இதை ருசி பார்த்துவிட்ட நாம் அனைவரும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். ஸ்தோத்திர பண்டிகைக்காக ஜெபித்தால் மட்டும் போதாது!*

*கடந்த காலங்களில் உற்சாகமாக பண்டிகையின் ஸ்டால்களை சிறப்பாக நடத்தியதுபோல், இந்த ஆண்டிலும் சிறப்பாக நடத்தி கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். மார்த்தாளுடைய ஊழியம் இந்த பண்டிகை கொண்டாட்டத்தில் தேவைப்படுகிறது. ஆதலால் ஊழியம் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும்*

*இப்படிக்கு,*
***உங்கள் ஆயரம்மா***
***Angel .C***




**நாளைய தினத்தின் துக்கங்களை கவலை ஒருபோதும் நீக்கிப்போடுவதில்லை; மாறாக இன்றைக்கு நமக்கு வேண்டிய பலத்தை விலக்கிவிடுகிறது**

*-கோரி டென்-பூம்*

# மிஷனரி பணித்தளச்செய்திகள்

**From Our Missionaries**

*நமது DMPB மிஷனரிகளிடமிருந்து...*

*ஜூலை- ஆகஸ்ட் மாத அருட்பணிகள் ஆசிர்வாதமாய் நடைபெற உதவிசெய்த கர்த்தருக்கு நன்றிப்பலிகளை ஏறெடுப்போம்.*

| | | |
|---|---|---|
| **மிஷனரி பெயர்** | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| **பணித்தளம்** | நீலமங்கலம் , கள்ளக்குறிச்சி-மாத்தூர் | மேல்முத்தானூர்- குருகிலாமூர் |
| **இறைமக்கள் சந்திப்பு – விபரம் / மாதம்** | ***July-Aug 2018*** | |
| **விசுவாச குடும்பங்கள்** | ***12*** | ***70*** |
| **விசுவாசிகள் அல்லாத குடும்பங்கள்** | ***22*** | ***116*** |
| **சந்தித்த நோயாளிகள்** | ***10*** | ***115*** |
| **சிறப்பு நிகழ்வுகள்** | ***5*** | ***3*** |

*நமது திருச்சபையின் முலமாக மலைவாழ் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி அனுப்பப்பட்ட மிஷனரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காக அனுதினமும் ஜெபியுங்கள்.*

*நமது மிஷனரிகள் அவர்கள் பணித்தளங்களில் உள்ள மக்களுக்காய், வியாதியோடு இருக்கிறவர்களுகாய் ஜெபிக்க கேட்டிருக்கிறார்கள். இக்காரியங்களுக்காகவும் அவர்கள் பணித்தளங்களில் ஏறெடுக்கிற எல்லா முயற்ச்சிகளுக்காகவும் உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெப கூடுகையிலும் ஜெபிக்க மறவாதீர்கள்.*

# திட்டங்கள் / PROJECTS

இந்த மாத திட்டங்கள் அனைத்தும் நமது அறுவடை ஸ்தோத்திர பண்டிகைக்கான ஆய்த்தபடுத்தல் குறித்து வரையறுகபட்டுள்ளது.

***Project for the Congregation.***

- ஸ்தோத்திர பண்டிகை ஸ்டால்களை போட உதவி செய்ய.
  *Help to put up stalls during harvest festival*

***Project for Children Bible School.***

- *Prepare your special gifts for harvest festival.*

***Project for Youth group*****.**

- *Prepare your special gifts for harvest festival.*

***Project for Women's Fellowship.***

- *Prepare your special gifts for harvest festival.*

***Project for Men's Fellowship.***

- *Prepare your special gifts for harvest festival.*

வருடத்திற்கு ஒரு முறை திருச்சபையின் ஒவ்வொரு விசுவாசியும் நேரடியாக ஊழிய களத்தில் இறங்கி ஊழியம் செய்ய வாய்ப்பு கிடைக்கும் தருணம் இந்த அறுவடை ஸ்தோத்திர பண்டிகை.

இந்த பொன்னான வாய்ப்பை நழுவ விடாமல், ஏதோ ஒரு வகையில் ஊழியம் செய்ய மனமகிழ்ச்சியுடன் முன்வாருங்கள்.




***Children's who did the September project:***

**Eastrine, Joshika, Joshua, Jayne John,**

**Jonathan, Jeremiah & Jemima**

# கட்டுரைகள் / ARTICLES

## ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்!

ஒரு கணவனும் மனைவியும் ஐந்து குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார்கள். வறுமைக்கு மேல் வறுமை அவர்களை வாட்டியது. கடன் பளு அவர்கள் குடியிருந்த சொந்த வீட்டையும் விழுங்கியது.

ஒரு நாள் அவர்கள் பிள்ளைகளில் ஒருவர் கடைக்கு சென்றிருந்தான். பாவம் அவன் ஏழை என்ற ஒரே காரணத்திற்க்காக, அவன் செய்யாத ஒரு திருட்டு குற்றத்தை அனியாயமான அவன்மேல் கடைக்காரன் சுமத்தினான். அந்த பிள்ளை அழுதுகொண்டே வீட்டுக்கு வந்தான். இந்த சம்பவம் அந்த சிறுவனின் தாயாரை வெகுவாக பாதித்தது.

கணவனும் வேலைக்கு சென்றார். அவளது மூத்த நான்கு பிள்ளைகளும் பள்ளிகூடம் சென்றபின், தனது கடைசி நான்காம் வயது பிள்ளையுடன் ஒரு அறைக்குள் நுளைந்தாள். கதவுகள் ஜன்னல்களை மூடினாள். பின் சமையல் எரிவாயுவை திறந்துவிட்டு தனது குழந்தையை அணைத்தபடி மரணத்தை எதிர்நோக்கியபடி படுக்கையில் சாய்ந்தாள்.

குழந்தை “அம்மா..“ இப்போழுதுதானே படுக்கையில் இருந்து எழுந்தோம் ஏனம்மா கதவை மூடினீர்கள்? ஒரே சூடாக இருக்கிறது? என்று பல கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தது.

“பேசாமலிரு“ என்று கூறுவதை தவிர அவளால் வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. அப்போழுது பக்கத்தில் உள்ள வீட்டில் உள்ள ஒரு வானொலி பெட்டியில் பாடல் ஒன்று அவள் காதில் கேட்கட்டாள் அந்த பாடல்...

**“பாவ சஞ்சலத்தை நீக்க பிராண நன்பன தான் உண்டே!**
**பாவபாரம் தீர்ந்து போக மீட்ப்பர் பாதம் தஞ்சமே!**
**சால துக்க துன்பத்தாலே! நெஞ்சம் நொந்து சோருங்கால்!**
**துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்!**
**கஷ்ட நஷ்டம் உண்டானாலும் இயேசுவண்டை சேருவோம்!**

இந்த பாடலை கேட்டபோது இயேசுவின் அன்பு அந்த தாயின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை அளித்தது. உடனே படுக்கையில் இருந்து எழுந்த அவள் தன் பிள்ளையை துக்கி கொண்டு வேகமாக அந்த அறையிலிருந்து வெளியேறினாள். இயேசு சுவாமி என்னை மன்னியும் என் பாவங்களை மன்னியும். எங்கள் கவலைகளை போக்கும். எங்கள் குடும்பத்தை காப்பாற்றும் என்று தெம்பி தெம்பி அழுதாள்.

அன்பே உருவான இயேசு அந்த தாயின் கதறலை கேட்டார். அவளுக்கு ஆறுதல் அளித்தார். இழந்து போன் ஆசிகளை ஒவ்வொன்றாக அக்குடும்பத்திற்க்கு அளித்தார்!.

**"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" (பிலி. 4:6).**

**- நெல்சன் சோபித ராஜ்.**

# கொடுங்கள்

**"கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்"**
(லூக்கா 6:38)

**நாம்** மற்றவர்களுக்கும் கர்த்தருக்கும் கொடுப்பதை வேதம் உற்சாகப் படுத்துகிறது. நாம் கொடுக்கும் போது கர்த்தர் நமக்குத் திரும்பக் கொடுப்பார். சில வேளைகளில் பத்து மடங்கு ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம், சில வேளைகளில் ஆயிரம் மடங்கு (உபா 1:11) ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம். சில வேளைகளில் வானத்தின் பலகணிகளைத் திறந்து (மல் 3:10) கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

**இயேசு** கிறிஸ்துவின் வாழ்க்கையை நோக்கிப் பார்ப்போமானால், அவருடைய வாழ்க்கை மற்றவர்க்டகு கொடுக்கிறதாகவே இருந்தது. பிதாவினிடத்தில் எதை எல்லாம் பெற்றுக் கொண்டாரோ அதை எல்லாம் நமக்குத் தாராளமாக பகிர்ந்து கொடுக்கிறவராகவே இருந்தார்(யோவான் 16:33). சந்தோஷத்தைக் கொடுக்கிறார் (யோவான் 15:11). பரலோராஜ்யத்தின் திறவு கோல்களை கொடுக்கிறார் (மத் 16:19). தம்முடைய மகிமையை கொடுக்கிறார் (யோவான் 17:22). உண்மையில் இயேசுகிறிஸ்து ஒன்றையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையுமே நமக்காக கொடுத்து விட்டார். தம்முடைய இரத்தத்தைக் கொடுத்தார், மாம்சத்ததைக் கொடுத்தார், ஜீவனையே கொடுத்து விட்டார். எப்போதும் தந்தையிடம் நமக்காக பரிந்து பேசும் உத்தம பிரதான ஆசாரியராய் இருக்கிறார்.

**ஒரு** ஆடும் கோழியும் மிகுந்த நண்பர்களாய் இருந்தார்களாம். ஒரு நாள் சந்தை வழியாய் அவர்கள் இருவரும் நடந்து சென்று கொண்டிருக்கையில் ஒரு கடையில் கோழி முட்டைகள் அழகாக அடுக்கி வைத்திருந்ததைப் பார்த்த கோழி, மிகவும் பெருமையுடன்

ஆட்டைப் பார்த்து, அதோ பார் நாங்கள் ஜனங்களுக்கு எவ்வளவாய் கொடுக்கிறோம் என்று பெருமிதமாய் சொன்னதாம். அவர்கள் அப்படியே சற்று தூரம் சென்றதும் ஒரு இறைச்சிக்கடை வந்ததாம். அதைப் பார்த்த ஆடு கோழியையப் பார்த்து சொன்னதாம், கோழியே நீங்கள் வெறும் முட்டைகளைத்தான் கொடுக்கிறீர்கள் அதோ பார் நாங்கள் எங்களையே முழுமையாகக் கொடுக்கிறோம் என்று.

**நாம்** கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொடுக்கிறோம் அதையே பெருமிதமாகவும் எண்ணுகிறோம். ஆனால் கர்த்தரோ தம்மையே நமக்காக கொடுத்தார். தம்மையே கொடுத்த கர்த்தருக்கு வெறும் காணிக்கைகளை மாத்திரம் நாம் கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா? அதற்கும் மேலான காரியங்களையும் செய்ய முன் வர வேண்டாமா? நம் உள்ளத்தில் அன்பு இருக்குமானால் நாம் ஆண்டவருக்காக எதையும் தியாகம் செய்ய ஆயத்தமாய் இருப்போமல்லவா? சிந்தித்துப் பார்ப்போம்.

**சூனேமியாள்** தீர்க்கத்தரிசியாகிய எலிசாவுக்கு உணவு அளித்தாள், தங்கியிருக்க இடம் கொடுத்தாள், தன் மேல் வீட்டறையையே அவனுக்காக ஆயத்தம் பண்ணினாள் (II இராஜாக்கள் 4-ம் அதிகாரம்). திராணிக்கும் மேலாக கொடுத்ததினால் அவள் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது, வேதத்தில் நீங்காத இடம் பெற்றவளானாள்.

**கர்த்தர்** நமக்குக் கொடுப்பது நம் வாழ்கையில் நாம் அவரிடமிருந்து பெறும் மாபெரும் பாக்கியம். அந்த பாக்கியத்தை நாம் உதாரத்துவமாய் பகிர்ந்து கொள்ளும் போது மேலும் அபரிதமான ஆசீர்வாதங்கள் கர்த்தரிடத்திலிருந்து நமக்கு வரும். ‘‘உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும், எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்’’ (நீதி 11:25). ‘‘கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்; அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்’’ (நீதி 2:9) என வேதம் கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதங்களைக்குறித்துக் கூறுகிறது.

‘‘**அவர்கள்** மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவாகளாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுநடத உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தர்களென்பதற்கு நான் சாட்சியாயிருக் கிறேன்’’ (II கொரி 8:2,3) என்று அப்போஸ்தலனாகிய பவுல் தியாகமாய் திருச்சபைக்கென்று கொடுத்த மக்கெதோனியா

தேசத்து மக்களைக் குறித்து சாட்சி பகருகிறார். நாமும் நம்மையும் கர்த்தர் நமக்கு அருளிய ஆசீர்வாதங்களையும் கர்த்தருக்கென்று பிரஜோஜனப்படுத்துவோம். தேவ ஆசீர்வாதங்களை நிறைவாய்ப் பெறுவோம்..

***-M.Nesamony.***

# சிறுவர் பகுதி / *CHILDREN'S PLACE*

## The Price of Love

A wealthy man and his son loved to collect rare works of art. They had everything in their collection, from Picasso to Raphael. They would often sit together and admire the great works of art.

When a huge conflict between a few countries broke out, the son went to war. He was very courageous and died in battle while rescuing another soldier. The father was notified and grieved deeply for his only son.

About a month later, just before Christmas, there was a knock at the door. A young man stood at the door with a large package in his hands. He said, "Sir, you don't know me, but I am the soldier for whom your son gave his life. He saved many lives that day, and he was carrying me to safety when a bullet struck him in the heart and he died instantly. He often talked about you and your love for art." The young man held out the package. "I know this isn't much. I'm not a great artist, but I think your son would have wanted you to have this."

The father opened the package. It was a portrait of his son, painted by the young man. He stared in awe at the way the soldier had captured the personality of his son in the painting. The father was so drawn to the eyes that his own eyes welled up with tears. He thanked the young man and offered to pay him for the picture. "Oh, no sir, I could never repay what your son did for me. It's a gift."

The father hung the portrait over his mantle. Every time visitors came to his home, he took them to see the portrait of his son before he showed them any of the other great works he had collected.

The man died a few months later. There was to be a great auction of his paintings. Many influential people gathered, excited over seeing the great paintings and having an opportunity to purchase one for their collection.

On the platform sat the painting of the son. The auctioneer pounded his gavel. "We will start the bidding with this picture of the son. Who will bid for this picture?"

There was silence…

Then, a voice in the back of the room shouted, "We want to see the famous paintings. Skip this one."

But the auctioneer persisted. "Will somebody bid for this painting. Who will start the bidding? $100, $200?"

Another voice said angrily, "We didn't come to see this painting. We came to see the Van Goghs, the Rembrandts. Get on with the real art!"

But still the auctioneer continued. "The son! The son! Who'll take the son?"

Finally, a voice came from the very back of the room. It was the longtime gardener of the man and his son. "I'll give $10 for the painting." Being a poor man, it was all he could afford.

"We have $10. Who will bid $20?"

"Give it to him for $10. Let's see the masters."

"$10 is the bid. Won't someone bid $20?"

The crowd was becoming angry. They didn't want the picture of the son. They wanted the more worthy investments for their collections.

The auctioneer pounded the gavel. "Going once, twice, SOLD for $10!"

A man sitting on the second row shouted, "Now let's get on with the collection!"

The auctioneer laid down his gavel. "I'm sorry; the auction is over."

"What about the paintings?"

"I am sorry. When I was called to conduct this auction, I was told of a secret stipulation in the will. I was not allowed to reveal that stipulation until this time. Only the painting of the son would be auctioned. Whoever bought that painting would inherit the entire estate, including the paintings.

The man who took the son gets everything!"

God gave His son 2,000 years ago to die on the cross. Much like the auctioneer, His message today is: "The son, the son, who'll take the son?" Because, you see, whoever takes the Son gets everything.

*For God so loved the world that he gave his one and only Son, that whoever believes in him shall not perish but have eternal life. (John 3:16)*

-***Diniya Sunshine***

**Our greatest concern for our children should be that they grow to "*love God above all else*…'**

# *Children's Quiz*

## The Gospel According To Acts Chapters 11 & 20

1. The Church in Jerusalem sent which individual to Antioch?
   a) Saul b) St. Peter c) St. Barnabas d) None of the above

2. "Peter was therefore kept in prison, but ______________ was offered to God for him by the church."
   a) A holy sacrifice. b) Alms c) Constant prayer.

3. Who fell asleep, was buried with his fathers, and saw corruption?
   a) David. b) Jesus. c) Abraham. d) Jacob

4. God had opened what door to the Gentiles?
   a) "The door of the Gospel." b) "The door of faith."
   c) "The door of salvation.''

5. The council in Jerusalem sent two leading men along with Paul and Barnabas back to Antioch with their decision on circumcision. Name one of the two.
   a) Barabbas b) Barsabbas c) Bartholomew d) Cilicia

6. "So they said, ______________, and you will be saved, you and your" Household?'
   a) "Believe on the Lord Jesus Christ." b) "Receive the Holy Spirit."
   c) "Accept the gospel."

7. "Then certain __________ and __________ philosophers encountered him. And some said, 'What does this babbler want to say?' Others said, 'He seems to be a proclaimer of foreign gods,' because he preached to them Jesus and the resurrection."
   a) Socratic; Platonic. b) Aristotelian; Cynic. c) Epicurean; Stoic.

8. How long did St. Paul teach the word of God in Corinth?
   a) Six months. b) One year c) One year and six months

9. Which of these individuals is not listed as one of St. Paul's traveling companions in Acts chapter nineteen?
   a) Gaius b) Silus. c) Aristarchus.

10. After what holy days did St. Paul and his companions sail away from Philippi?
   a) The Days of Awe b) The Days of Unleavened Bread.
   c) The Day of Pentecost

---

## ***Last Month Children's Quiz Correct Answers:***

## ***September 2018***

1 b) The apostles
2 a) Nazareth (2:22)
3 b) Peter and John (3:1)
4 a) Joppa (10:5)
5 d) A light from heaven flashed around him, and he fell to the ground
6 c) All kinds of four-footed creatures and reptiles and birds
7 c) She was peter's sister-in-law
8 b) Lied to the Holy Spirit
9 a) Moses killed an Egyptian who was mistreating and Israelite
10 a) They laid it at the feet of the Apostles.

------------------------------


## Children who wrote the Correct answers:

- *Annlin Sophia Nelson*
- *Angelin Sophia Nelson*
- *Dennis Roger*
- *Dinya Sunshine*
- *Easterine Benedicta Raj*
- *Earline Bernice Raj*
- *Joshika Vashni*
- *Joshuva K*
- *Roshan Ravindra*
- *Shelbino Paul*
- *Eric Jayden Jason*
- *Joel Shino Mathew*

Congrats!!

You have done a wonderful job..!!

# Cartoon of the Month





Why spend money on what is not bread, and your labor on what does not satisfy? Listen, listen to me, and eat what is good, and your soul will delight in the richest of fare. – Isaiah 55:2 NIV

## Children's who did the Coloring
## David & Goliath

- Johan Sanjo
- Jeyne John
- Jonathan Asher
- Jayme
- Jeremiah Alan
- Shelbino Paul



# Kids Coloring





# *Bible Crosswords*

**Noah's Ark**


(For Children above 10 Yrs Old)



How much do you know about one of the most famous events in the Bible?

This Cross Words will tell..!!!
If you need help, turn the Bible to Genius- Chapters 6 to 9

**Note:** Some answers have 2 words.
There is no space between words in the puzzle.



**ACROSS**

1. The animals were male and ___.
2. Noah built this after leaving the ark
5. What the dove brought back in her beak (2 wds.)
7. Number of each kind of clean animal taken on the ark
11. Noah was a ___ man, blameless in his time.
14. Noah did ___ that God had commanded him.
15. Second type of bird Noah sent out from the ark
17. Precipitation
18. He closed the door of the ark (2 wds.)
21. What Noah used to coat the ark
23. Number of times rain had fallen on the earth, previous to Noah
25. God established His __ with Noah and his descendants.

**DOWN**

1. Noah was spared because he found ___ with God.
3. Sign of God's promise to never flood the earth again
4. The ark had lower, second and third ___.
6. Number of days and nights it rained
8. Noah's age when the floodwaters came (2 wds.)
9. Type of wood used for the ark
10. As water subsided, the ark rested on these mountains
12. Noah's sons were Shem, Ham, and __.
13. God's post-flood: Be fruitful and ___.
16. Pre-flood: The Lord saw that the ___ of man was great on earth.
19. Number of every kind of unclean animal on the ark
20. Number of people on the ark
22. Unit of measurement used in building the ark
24. God's post-flood words: Do not eat flesh with its __

---

**Children's who successfully completed September'18 CrossWordPuzzle:**

*Annalin Sophia, Joshika Vashni, Joshua & Shelbino Paul*

Excellent job :)

# வேத வினா விடை போட்டி

## *அக்டோபர்-2018*

## *ஏசாயா : 41 முதல் 50*

1. யார் வெட்கபட்டு இலச்சையடைந்து, ஏகமாய் கலங்கிபோவார்கள்?
2. கர்த்தர் யாரைப் போல் புறப்பட்டு தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்?
3. யாருக்கு சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்கிறார்?
4. யாருக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல கர்த்தராகிய ஆண்டவர் கல்விமானின் நாவை தந்தருளினார்?
5. வனாந்தரதிலே தண்ணீர்களையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால் எது கர்த்தரை கனம்பண்ணும்?
6. யாரோடு வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமல் போவார்கள்?
7. நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத் தவிர தேவன் இல்லை என்ற வசனம் எந்த அதிகாரத்தில் உள்ளது?
8. ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்துவது யார்?
9. யார் இனி ராஜ்யங்களின் நாயகியென்று அழைக்கப்படுவதில்லை?
10. கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொன்னது யார்?

## <u>கடந்த மாதத்திற்கான விடைகள்</u>

1. இரத்ததினால் திருப்தியாகி நிணத்தினால் பூரிக்கிறது (ஏசா 34:6)
2. குழியில் இறங்குகிறவர்கள் (ஏசா 38:18)
3. லட்சத்தெண்பத்தையாயிரம் (ஏசா 37:36)
4. சமாதனம் (ஏசா 32:17)
5. பலாதானின் குமாரனாகிய மெரோதாக் பலாதான் (ஏசா 39:1)
6. நியாத்தினாலும் நீதியினாலும் (ஏசா 33:5)
7. பறந்து காக்கிற பட்சிகளைப் போல (ஏசா 31:5)
8. தீட்டுள்ளவன் (ஏசா 35:8)
9. கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் (ஏசா 40:31)
10. அசிரியா ராஜாவாகிய சனகெரிப் (ஏசா 36:1)

## கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்

***செப்டம்பர்-2018***

திருமதி.ஜெயின் ராஜவேல்.

திருமதி.பிப்லின் நெல்சன்.

திருமதி.அகஸ்டா லாரன்ஸ்.

திருமதி.ஹெப்சிபாய் நேசமணி.

திருமதி.ஷஹிலா கிரேஸ்

திருமதி.பெட்ரீஷியா ஜேசன்.

திருமதி.ஜெயந்தா ஜாண்.

திருமதி.எபென் *A* . பிரசாத்.

திருமதி.ரதிகா செல்வகுமார்.

திருமதி. ஜமுனா ராஜன்

# வாழ்த்துக்கள்!!!...

**இன்னும் வேதத்தை ஆழமாய் கற்க-தியானிக்க-புரிந்துகொள்ள கர்த்தர் உங்களுக்கு அருள்புரிவாராக.**




*You can also download our Monthly Manna by visiting our Church Website*

***http://www.csitamilparishalain.org***

*சர்ச் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர்

(Birthday & Wedding Anniversary Celebrants)

## பிறந்த நாள் ஆசரிப்போர் / Birthday Celebrants

| Date | Name | Contact |
|---|---|---|
| 01-Oct | John Gerald Sheeba Derick | 050 667 7528 |
| 01-Oct | Fanny Esther | 055 553 5200 |
| 01-Oct | H.Johanna Jane | 055 374 0685 |
| 04-Oct | Antony Lerinson | 055 701 1315 |
| 05-Oct | Immanuel Suthan | 055 640 0635 |
| 08-Oct | Akila | 056 641 1363 |
| 09-Oct | D.P.Mercy | 052 798 0347 |
| 11-Oct | Prabu Dinesh Kumar | 055 628 1237 |
| 12-Oct | Arun Jose | 056 946 7109 |
| 13-Oct | Anitha Geroge | 055 484 5125 |
| 15-Oct | Erline Bernice Raj | 050 322 7592 |
| 15-Oct | Jovin | 055 832 8701 |
| 15-Oct | Godson Daniel Rao | |
| 17-Oct | Akshaya Kannan | 050 4821006 |
| 17-Oct | Sahila Grace Justin | 056 368 7363 |
| 17-Oct | Daisy Baskar | 050 5855721 |
| 18-Oct | Helen Hemabai | 056 319 8509 |
| 20-Oct | Aidean Joyphonse Derick | 050 667 7528 |
| 20-Oct | Patricia Santhi | 056 399 6933 |
| 23-Oct | Biblin Christabel | 050 523 2912 |
| 24-Oct | Justin Oliver | 050 573 7096 |
| 28-Oct | J.B.J.Benjamin | |
| 31-Oct | Eion Jayden | 056 2578373 |
| 22-Oct | Sheeba Deva Prakash | 052 798 0347 |
| 27-Oct | Jayan Dharmaraj | 055 249 8186 |

*Wishing you a birthday filled with God's Blessings, Thanking God for the gift of your Faith-Filled life and Praying that the Holy Spirit will strengthen you as you serve the Church...*

# *Happy Birthday...*

### திருமணநாள் ஆசரிப்போர்/*Wedding Anniversary*

| *Date* | *Name* | *Contact* |
|---|---|---|
| 5- Oct | Ravindra & Sunitha | 056 885 2900 |
| 21- Oct | Prabu Dinesh Kumar & Rebecca | 055 628 1237 |

# *Happy Wedding Anniversary*

**இந்த மாதத்தில் பிறந்த நாளையும் திருமண நிறைவு நாளையும் காணும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் அன்பின் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறோம்**

---

# ஊக்கமாய் ஜெபிப்போம்...

*கிறிஸ்துவிற்க்காய் தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்து....*
*சுவிசேஷ பாரம் கொண்டு....*
*தாய், தந்தை, மனைவி, பிள்ளைகளை பிரிந்து....*
*"மிஷனரி" எனும் உன்னத பணி சுமந்து...*
*சொல்லப்பட்டிராத இடங்களில்...*
*மந்தையில் இன்னும் சேர்க்கப்படாத ஆடுகளை தேடி...*
*அலைந்து கொண்டிருக்கும்....*
*நமது அருமை மிஷனரிகள் பலர்....*
*அனுதினமும்*
*அடிக்கப்பட்டும், நெருக்கப்பட்டும் பல இன்னல்கலுக்குள்*
*சிக்கி தவிக்கின்றனர்.*

**அவர்களுக்காய் நாம் அனுதினமும் ஊக்கமாய் ஜெபிப்போம்.**

# தினசரி வேதவாசிப்பு

## Daily Bible Reading – Sep-2018

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்.1:2)

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| Oct'1 | Mon | Ephesians 1 | 1 Kings 3 |
| Oct'2 | Tue | Ephesians 2 | 1 Kings 4 - 5 |
| 3 | Wed | Ephesians 3 | 1 Kings 6 |
| 4 | Thu | Ephesians 4 | 1 Kings 7 |
| 5 | Fri | Ephesians 5 | 1 Kings 8 |
| 6 | Sat | Ephesians 6 | 1 Kings 9 |
| 7 | Sun | Philippians 1 | 1 Kings 10 |
| 8 | Mon | Philippians 2 | 1 Kings 11 |
| 9 | Tue | Philippians 3 | 1 Kings 12 |
| 10 | Wed | Philippians 4 | 1 Kings 13 |
| 11 | Thu | Colossians 1 | 1 Kings 14 |
| 12 | Fri | Colossians 2 | 1 Kings 15 |
| 13 | Sat | Colossians 3 | 1 Kings 16 |
| 14 | Sun | Colossians 4 | 1 Kings 17 |
| 15 | Mon | 1 Thessalonians 1 | 1 Kings 18 |
| 16 | Tue | 1 Thessalonians 2 | 1 Kings 19 |
| 17 | Wed | 1 Thessalonians 3 | 1 Kings 20 |
| 18 | Thu | 1 Thessalonians 4 | 1 Kings 21 |
| 19 | Fri | 1 Thessalonians 5 | 1 Kings 22 |
| 20 | Sat | 2 Thessalonians 1 | 2 Kings 1 |
| 21 | Sun | 2 Thessalonians 2 | 2 Kings 2 |
| 22 | Mon | 2 Thessalonians 3 | 2 Kings 3 |
| 23 | Tue | 1 Thimothy 1 | 2 Kings 4 |
| 24 | Wed | 1 Thimothy 2 | 2 Kings 5 |
| 25 | Thu | 1 Thimothy 3 | 2 Kings 6 |
| 26 | Fri | 1 Thimothy 4 | 2 Kings 7 |
| 27 | Sat | 1 Thimothy 5 | 2 Kings 8 |
| 28 | Sun | 1 Thimothy 6 | 2 Kings 9 |
| 29 | Mon | 2 Thimothy 1 | 2 Kings 10 |
| 30 | Tue | 2 Thimothy 2 | 2 Kings 11-12 |

# திருசபை ஆராதனை நேரம்
## Our Church Worship Timings

**மெயின் ஒர்ஷிப் ஹால் - ஓயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்-அய்ன்**
**Main Worship Hall – Owasis Hospital Campus, Al-Ain, UAE**

| | | |
|---|---|---|
| First & Third Fridays | 7:00 PM | Communion Service |
| First & Third Fridays | 6:30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| Second & Fourth Fridays | 6:30 PM | Bible Study |
| Every Friday | 6:15 PM | Children's Bible School |

**ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள் - ஜாஹலி**
**Regular Ministries at Parsonage- Jahli, Al-Ain, UAE**

| | | |
|---|---|---|
| First Friday | 11:00AM | Fasting Prayer |
| Every Wednesday | 7:30 PM | Bible Study |
| Second & Fourth Saturday | 7:00 PM | Gospel Ministry |
| Third Saturday | 7:30 PM | Women's Prayer |
| Last Day of Every Month | 11:30PM | Month End & Beginning Prayer |

***நமது திருச்சயின் 2018 ஆண்டிற்கான அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகை வரும் 26/10/2018 அன்று மாலை 4:00 மணிக்கு நடைப்பெறும் சபைமக்கள் இதற்க்காக தினமும் ஜெபியுங்கள்...***

***நீங்களும் பங்குபெறுங்கள்...***
***உங்கள் நண்பர்கள், உற்றார், உறவினர்களையும் அழைத்து வாருங்கள்.***

# Old Memories form our past Harvest Festivals












Strictly For Private Circulation

Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparish.org